**செய்தி வெளியீடு எண்: 483** **நாள்: 24.07.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழக அரசின், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பாக, 2018–20ஆம் ஆண்டில் 21 காது கேளாத மாற்றுத் திறனாளிகளுக்கு, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் (ஆண்கள் மட்டும்), “பொருத்துநர்” (Fitter) பிரிவில் இரண்டு ஆண்டுகள் “பொருத்துநர்” பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பிரிவில், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கிண்டி, சென்னை – 32 என்ற நிறுவனத்தில் நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.300/– அளிக்கப்படும். இந்த ஆண்டுக்கான இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்வதற்கான கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சி, மற்றும் 30.06.2018 அன்று 18 வயதிலிருந்து 25 வயது வரையுள்ள, காது கேளாத மாற்றுத் திறனாளிகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் மற்றும் அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள். 27.07.2018 மாலை 5.45க்குள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**